தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

### இரங்கல் தீர்மானம்

**தீர்மானம் எண்: 174**

இரங்கல் தீர்மானம் முன்னாள் பாரதப் பிரதமர் திரு வி.பி.சிங் அவர்கள் மறைவிற்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழகத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக உயிரிழந்தவர்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் நகஎண் 23529/08/ப்பி2 நாள் 25–9–2008ன்படி தூத்துக்குடி மாநகராட்சிக்கு 12வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டத்தின் கீழ் 2008–09ஆம் ஆண்டுக்கு திடக் கழிவு மேலாண்மைப்பணிகள் மேற்கொள்ள முதற்கட்டமாக ரூ 26,29,239/– நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதே அளவு 2வது நிதி ஒதுக்கீடு எதிர்நோக்கி மொத்தம் ரூ 52,58,477/– க்கு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான மதிப்பீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

| வ எண் | பணியின் விபரம் | எண்ணம் | உத்தேச மதிப்பீட்டுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குப்பைகள் அள்ள மூன்று சக்கர இழுவை சைக்கிள் மற்றும் (6 பின்கள் )வாங்குதல் | 20 எண்ணங்கள் | 3.60 |
| 2 | குப்பைகள் அள்ள மூன்று சக்கர இழுவை சைக்கிள் வாங்குதல் | 20 எண்ணங்கள் | 3.40 |
| 3 | டம்பர் பிளேசர் வாகனம் | 1 எண்ணம் | 13.00 |
| 4 | டம்பர் பிளேசர் பின்கள் (3 க.மீ) | 20 எண்ணங்கள் | 14.00 |
| 5 | உரக்கிடங்கில் கழிப்பறை கட்டுதல் | 1 | 2.00 |
| 6 | உரக்கிடங்கில் கிட்டங்கி கட்டுதல் | 1 | 2.00 |
| 7 | உரக்கிடங்கிற்கு அணுகுசாலை அமைத்தல் | 1 | 8.50 |
| 8 | உரக்கிடங்கிற்கு வடிகால் அமைத்தல் | 1 | 5.50 |
| 9 | உரக்கிடங்கில் விளக்குகள் அமைத்தல் | – | 1.00 |

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

2. அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியில் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம்.

இ1. 26600/08

**தீர்மானம் எண்: 175**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

2. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் நகஎண் 23529/08/ப்பி2 நாள் 25–9–2008ன்படி தூத்துக்குடி மாநகராட்சி 12வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டத்தின் கீழ் 2008–09ஆம் ஆண்டிற்கு கணினிமயமாக்குதல் மற்றும் மின் கட்டணம் நிலுவைத்தொகைகள் செலுத்த முதல் கட்டமாக ரூ. 13,14,619/– விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதே அளவு இரண்டாவது கட்ட நிதி ஒதுக்கீடு எதிர்நோக்கி சேர்த்து ரூ 26,29,238/– மதிப்பில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கும் அதற்கான மதிப்பீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

| வ எண் | பணியின் விபரம் | எண்ணம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அலுவலக உபயோகத்திற்கு கணனிகள் வாங்குதல் | 10 எண்ணங்கள் | 4.20 |
| 2 | அலுவலக உபயோகத்திற்கு பேக்ஸ் இயந்திரம் வாங்குதல் | 1 எண்ணம் | 0.25 |
| 3 | அலுவலக உபயோகத்திற்கு லைன் பிரிண்ட்ர் வாங்குதல் | 1 எண்ணம் | 2.50 |
| 4 | அலுவலக உபயோகத்திற்கு கலர் பிரிண்டர் | 1எண்ணம் | 0.50 |
| 5 | நெட் ஒர்க் கனெக்ஷன் வசதி செய்தல் | | 0.50 |
| 6 | லேப் டாப் (பொறியாளர் உபயோகத்திற்கு) | 1 | 0.40 |
| 7 | லேன் எக்ஸ்டன்டர் | 2 | 0.60 |
| 8 | L.C.D. புரெஜெக்டர் | 1 | 0.40 |
| 9 | U.P.S. 5 KVA | 3 | 1.80 |
| 10 | ராஜாஜி பூங்காவில் கணனி வசூல் மையம் அமைத்தல் | 1 | 1.30 |
| 11 | கணனி டேபிள் மற்றும் சேர் வாங்குதல் | 10 | 0.70 |
| 12 | Windows Server STD 2003 | 1 | 0.42 |
| 13 | HCL/ OEM RACKS | 1 | 0.28 |

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. வ.எண் 1 முதல் 8 வரையில் மற்றும் 12, 13ல் உள்ள இனங்களை டி.ஜி.எஸ் & டி விலை விகிதத்தில் நேரடியாக வாங்கவும் அனுமதிக்கலாம்.
3. வ.எண் 11 டான்சி நிறுவனத்தில் நேரடியாக வாங்கவும் அனுமதிக்கலாம்.

இ1. 26600/08

**தீர்மானம் எண்: 176**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

3. தூத்துக்குடி உள்ளூர்த்திட்டக்குழுமம் பகுதிக்குள் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உத்தேதசக்கப்படும் அபிவிருத்திகளுக்கு சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை நகஎண் 41474/93 1டி1 நாள் 24–9–1993இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திட்ட அனுமதி வழங்கும் அதிகார பகிர்மானம் 26–9–2008 முதல் மாநகராட்சிக்கு வழங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் உள்ளூர்த்திட்டக்குழும தலைவர் அவர்களின் 18–10–2008ம்தேதிய நகஎண் 25/08/தூஉதிகு எண் செயல்முறை ஆணையில் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி

நிலையிலுள்ள கட்டுமானங்களின் பரப்பளவையும் சேர்த்து 200 ச.மீ பரப்பளவு வரை தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட ஒரு குடியிருப்பு (Residential Building) நிலையிலுள்ள கட்டுமானங்களின் பரப்பளவையும் சேர்த்து 100 ச.மீ பரப்பளவு வரை தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கடை கட்டிடம் ( Shop building)கட்ட திட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்

ஜி1. 15386/03

**தீர்மானம் எண்: 177**

பதிவு செய்யப்பட்டது

4. தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குள் (1) மாநகராட்சி ராஜாஜி வாட்டர்டேங்க் முன் சுவர் (2) தூத்துக்குடி கீழுர் இரயில் நிலையம் முன்பு (3) அழகர் ஜுவல்லர்ஸ் எதிர் ( BSNL connection box வளாகம்) (4) 4ம் இரயில்வே கேட் ஆகிய இடங்களில் காசநோய் (T.B. Hoarding) பற்றிய விழிப்புணர்வு விளம்பர பலகை நிறுவ துணை இயக்குநர் மருத்துவ பணிகள் (காசம்) மாவட்ட சுகாதாரச் சங்கம் அவர்களின் நகஎண் 182–DHS- RNTCP/2008 நாள் 18–08–2008ஆம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

காசநோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே சென்றடையும் பொருட்டு மேற்படி இடங்களில் விளம்பர பலகை நிறுவ விளம்பர வரி மற்றும் தரை வாடகை ஆகியவற்றல் இருந்து விலக்களிளிக்கவும், விளம்பர போர்டுகள் நிறுவுவது தொடர்பாக இம்மாமன்றம் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் விளம்பர பலகை நிறுவிக்கொள்ள தடையில்லா சான்று வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்5. 28475/08

**தீர்மானம் எண்: 178**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளான

1. புதிய பேருந்து நிலையம்
2. அண்ணா பேருந்து நிலையம்
3. வ.உ.சி கல்லூரி நுழைவு வாயில்
4. காமராஜ் கல்லூரி நுழைவு வாயில்
5. மாநகராட்சி அலுவலகம் அருகில்
6. கீழுர் தொடர்வண்டி நிலையம்
7. கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு
8. மாநில பாரத வங்கி அருகில்
9. வஉசி சந்தை காமராஜ் சிலை அருகில்
10. தீயணைப்பு நிலையம் அருகில்
11. அழகர் மஉறால் திருமண மண்டபம் அருகில்
12. அபிராமி திருமண மண்டபம் அருகில்
13. நீதிமன்ற நுழைவு வாயில்
14. 2ம் கேட் மேலூர்
15. 1ம் கேட் காந்தி சிலை அருகில்
16. காய்கனி சந்தை அறிஞர் அண்ணா சிலை அருகில்
17. விவிடி எண்ணெய் தொழிற்சாலை அருகில்
18. குரூஸ் பர்னாந்து சிலை அருகில்
19. இராஜாஜி பூங்கா நுழைவு வாயில்
20. வட்டக்கோயில் அருகில்
21. ரோச் பூங்கா

ஆகிய இடங்களில் திரு மோ. அன்பழகன் துணை பொதுச் செயலாளர் உலகத் திருக்குறள் பேரவை அவர்கள் திருக்குறள் பலகை வைத்துக்கொள்ள அனுமதி கோரியுள்ளார். வரிசை எண் 1, 2 ஆகிய பேரூந்து நிலையங்களில் அபிவிருத்திப் பணி நடைபெற உள்ளதாலும் வஎண் 5 மற்றும் 16 ஆகிய இடங்களை தவிர்த்து மற்ற இடங்களில் பொதுமக்களின் பொது நலன் கருதி திருக்குறள் பலகை அமைக்கப்பட உள்ளதால் தரை வாடகையிலிருந்து விலக்கு அளிக்க அனுமதியும் நெடுஞ்சாலைத்துறை மாவட்டகாவல்துறையிலிருந்து போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் எவ்வித இடையூறு இல்லை என சான்று பெற்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் விளம்பர பலகை அமைத்துக்கொள்ள உரிய முறையினை உரிமம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளின் பேரில் திருக்குறள் பலகை அமைத்துக்கொள்ள தடையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி அமைத்துக் கொள்ள தடையில்லா சான்றிதழ் வழங்க மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

எப்5. 21946/08

**<u>தீர்மானம் எண்: 179</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சியின் எல்கைக்குள் உள்ள பக்கிள் கால்வாயில் 4. 80 கி.மீ. முதல் 6. 60 கி.மீ. வரை கால்வாய் படுகைகள் முழுமையும் தூர்வாறுதல் கால்வாய் ஒட்டியுள்ள காடுகள் சுத்தம் செய்தல் கால்வாய் பரப்புகளில் R.R.C சிலாப் அமைத்தல் மற்றும் தேவைப்படும் இடங்களில் குறுக்கு பாலங்கள்அமைக்கும் பணிக்கு அரசாணை எண் 110 நாள் 01–08–2008ஆம் தேதியில் 698. 31 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதில் தற்சமயம் ரூ. 542. 00 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி 17–10–2009ஆம் தேதி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ். ரெக்ஸ் | மதிப்பீட்டிற்கு ரூ. 9.19% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ. 4.95% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு எஸ். சுதர்சன் அவர்கள் 4.95% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகமாக கொடுத்துள்ளார். தற்போது கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டாலும் தற்போது பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை விட அதிகமாக வரப்பெறும் காரணத்தாலும் மேற்படி பணி உடனே முடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் 4.95% சதவீதம் அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அவசரமும், பணியின் அவசியம் கருதி, மாமன்றம் ஏற்கலாம். மேலும் பொறியாளர் கையேடு பக்கம் எண் 9 பத்தி எண் 27. 2 இல் குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதங்களை குறிப்பிட்டு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் அதிகமான விலை விகிதங்களில் 5 % சதவீதத்திற்கு உட்பட்டுள்ளதை மாமன்றமே முடிவு செய்யலாம் என்பதால் திரு எஸ். சுதர்சன் என்பவர் கொடுத்துள்ள மதிப்பீட்டை விட அதிகமான 4.95% சதவீத ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 44/08–09/CE

**<u>தீர்மானம் எண்: 180</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் நகஎண் **23529/08/**ப்ப2 நாள் **25–9–2008**ன்படி தூத்துக்குடி மாநகராட்சிக்கு **12**வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டத்தின் கீழ் **2008–09**ஆம் ஆண்டுக்கு சாலைகள் மற்றும் வடிகால் பராமரிப்பு பணிகள் செய்ய முதல் கட்டமாக ரூ **13,14,619/–** நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதே சம அளவு **2**வது கட்ட நிதி

ஒதுக்கீட்டை எதிர்நோக்கி ரூ **26,29,238/–** மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கும், அதற்கான மதிப்பீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

| வ எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஜெயராஜ் சாலை வடக்கு பக்கம் உள்ள சாலை மேம்பாடு செய்தல் | 6.70 |
| 2 | மீனாட்சிபுரம் தெற்கு பக்கமுள்ள சாலை மேம்பாடு செய்தல் | 6.00 |
| 3 | பாலவிநாயகர் கோவில் தெரு மேல்பக்கமுள்ள சாலை மேம்பாடு செய்தல் | 14.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிகள் பொதுநிதியில் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் செய்யவும் அனுமதிக்கலாம்.
3. அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியில் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம்.

இ1. 26600/08

**<u>தீர்மானம் எண்: 181</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

**8)** இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவிற்கு கொசுப்புழு மற்றும் கொசு முட்டை ஒழிப்பு மருந்து MLO ( Mosquito Larvicidal Oil) தேவைப்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண் 62560/06/ஜெ2 நாள் 20–11–2007 மற்றும் 22–10–08 இல் மேற்கண்டவாறு கொசு ஒழிப்பு மருந்தினை வாங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளார்கள். எனவே இம்மாநகராட்சியின் அவசர அவசியம் கருதி 1000 லிட்டர் கொசு ஒழிப்பு மருந்து வாங்கவும் இதற்கான தோராயமான செலவுத்தொகை ரூ 1,65,000/–யை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு **1.** அனுமதிக்கலாம்.
**2.** மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

எச்4. 27255/2008

**<u>தீர்மானம் எண்: 182</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

**9.** இம்மாநகர் பகுதி சுப்பையாபுரம் **5**ஆம்தெருவில் நகரளவு எண் **3761**ல் உள்ள் ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி நகராட்சியிலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டதை எதிர்த்து திருமதி பாப்பு அம்மாள் என்பவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரை முதல் பிரதிவாதியாகவும், மாநகராட்சி ஆணையரை **2**ம் பிரதிவாதியாகவும் திரு மது ஆனந்த் , திரு ராஜாமணி என்பவர்களை **3, 4** பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண் IA **1294/08** in O.S. 468/08 ம் மற்றும் திருமதி ராஜபேச்சி நாச்சியார் என்ற சந்திரா என்பவர் மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண் ஓ.எஸ். **480/2008** என்ற வழக்கிலும் மாநகராட்சி சார்பில் மாநகர் மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1. 5168/2005

**<u>தீர்மானம் எண்: 183</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி அவர்கள் மூலம் தினமலர், தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ 1080/– செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 184**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

மபஎண் 18/2008–09

11. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி அவர்கள் மூலம் தினத்தந்தி, தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ 1826/– செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

மபஎண் 28/2008–09

**தீர்மானம் எண்: 185**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. பக்கிள் ஓடைத்திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு மற்றும் திருத்த அறிவிப்பினை இணை இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்கள் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும் மற்றும் அதற்கான கட்டணம் ரூ 14,993/– மெசர்ஸ் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

இ1. 23660/07

**தீர்மானம் எண்: 186**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. தூத்துக்குடி மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2008–09 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு அறிவிப்பினை இணை இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை சென்னை அவர்கள் மூலம் ஆங்கிலம் மற்றும்தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம்செய்வதற்கும் அதற்கான கட்டணம் ரூ 8878/– மெசர்ஸ். என்திரல் கம்யூனிகேசன் (பி) லிமிடெட், சென்னை அவர்களுக்கு செலுத்துவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

இ1. 8959/08

**தீர்மானம் எண்: 187**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக பணி காரணமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்துக்கு சென்று வந்ததற்கான ஆகஸ்ட் 2008க்கு ரூ 1880/– மற்றும் செப்டம்பர் 2008க்கு ரூ 5751/–க்குரிய பயணப்பட்டியல் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

சி1. 5495/08

**தீர்மானம் எண்: 188**

அலுவலகக் குறிப்புப்படிஅங்கீகரிக்கப்பட்டது

15. இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள லெவஞ்சிபுரம் மாநகராட்சிப் பள்ளியில் புதியதாக கட்டிடம் கட்டும் பணி கல்வி நிதியின் கீழ் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 415 நாள் 18–7–2008ல் ரூ 22,50,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு எஸ். இன்னாசிமுத்து | மதிப்பீட்டிற்கு 5.95% அதிகம் | ரூ. | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 5.29% அதிகம் | ரூ. | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஐ. ஜெயசீலன் அவர்கள் 5. 29 %மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து Negosiation கேட்கப்பட்டு பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலை விகிதப் பட்டியலில் வரிசை எண் **2, 3, 8** மற்றும் **18**க்கு ஒப்பந்தப்புள்ளியை விட விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில்

| | |
|---|---|
| **1.** திரு எஸ். இன்னாசிமுத்து | மதிப்பீட்டை விட **5. 95** %அதிகம் |
| **2.** திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டை விட **4. 25** %அதிகம் |

மதிப்பீட்டு தொகையை விட **4. 25** %அதிகமாக வருகின்றது. தற்சமயம் மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் மோசமாக உள்ளதால் புதிய கட்டிடம் உடன் கட்ட வேண்டிய அவசியமுள்ளது. எனவே அவசர அவசியம் கருதி மதிப்பீடு தொகையை விட **4. 25** % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு ஐ. ஜெயசீலன் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் **98/2008–09**

**<u>தீர்மானம் எண்: 189</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சிப் பகுதி செவந்தாகுளம் ரோடு மாநகராட்சிப் பள்ளியில் புதியதாக கட்டிடம் கட்டும் பணி கல்வி நிதியின் கீழ் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 415 நாள் 18–7–2008ல் ரூ 22,50,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு 5.30% அதிகம் | ரூ. | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 6.60% அதிகம் | ரூ. | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி அவர்கள் 5. 30 %மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து Negosiation கேட்கப்பட்டு பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலை விகிதப் பட்டியலில் வரிசை எண் **2**ல் ஒப்பந்தப்புள்ளியை விட விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில்

| | |
|---|---|
| **1.** திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டை விட **4. 88** %அதிகம் |
| **2.** திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டை விட **6. 60** %அதிகம் |

மதிப்பீட்டு தொகையை விட 4. 88 %அதிகமாக வருகின்றது. தற்சமயம் மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் மோசமாக உள்ளதால் புதிய கட்டிடம் உடன் கட்ட வேண்டிய அவசியமாகின்றது. எனவே அவசர அவசியம் கருதி மதிப்பீடு தொகையை விட 4. 88 % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 99/2008–09

**<u>தீர்மானம் எண்: 190</u>**

அலுவலகக் குறிப்புப்படிஅங்கீகரிக்கப்பட்டது

17. இம்மாநகராட்சிப் பகுதி சாமுவேல்புரம் மாநகராட்சிப்பள்ளியில் மராமத்து செய்யும் பணிக்கு கல்வி நிதியின் கீழ் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 415 நாள் 18–7–2008ல் ரூ 15,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ரம்போலா , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ. 17. 85% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ. 20. 81% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ரம்போலா அவர்கள் 17.85 %மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து Negosiation கேட்கப்பட்டு பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலை விகிதப் பட்டியலில் வரிசை எண் 2ல் ஒப்பந்தப்புள்ளியை விட விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில்

| | |
|---|---|
| 1. திரு ரம்போலா , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4. 98 %அதிகம் |
| 2. திரு எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 20. 81 %அதிகம் |

மதிப்பீட்டு தொகையை விட 4. 98 %அதிகமாக வருகின்றது. தற்சமயம் மேற்கண்ட பள்ளிக் கட்டிடம் மோசமாக உள்ளதால் புதிய கட்டிடம் உடன் கட்ட வேண்டிய அவசியமாகின்றது. எனவே அவசர அவசியம் கருதி மதிப்பீடு தொகையை விட 4. 98 % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு ரம்போலா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 104/2008–09

**<u>தீர்மானம் எண்: 191</u>**

அலுவலகக் குறிப்புப்படிஅங்கீகரிக்கப்பட்டது

18. இம்மாநகராட்சி பகுதி கிரேட் காட்டன் ரோட்டில் உள்ள சி.வ. பள்ளியில் புதிய பள்ளி கட்டிடம் கட்டும் பணி கல்வி நிதியில் செய்ய 24–8–08 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண். 415 தேதி 18–7–2008 ல் ரூ 15,00,000/– அனமதி வழங்கியுள்ளது.

1) திரு. S. ரம்போலா மதிப்பீட்டிற்கு ரூ.25.14 % அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.
2) திரு.S. சுதர்சன் மதிப்பீட்டிற்கு ரூ.27.62 % அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

**<u>அலுவலகக் குறிப்பு</u> –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். ரம்போலா அவர்கள் 25.14% மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரரிடமிருந்து Negetation கேட்கப்பட்டு

பெறப்பட்டது. ஒப்பந்ததாரர் நிலை விகிதம் பட்டியலில் வரிசை எண் 13, 14 மற்றும் 18க்கு ஒப்பந்தப்புள்ளிகளைவிட விலைவிகிதத்தை குறைத்து கொடுத்துள்ளார், அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில்

1) திரு. S ரம்போலா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.86% அதிகம்
2) திரு.S. சுதர்சன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 27.60%

மதிப்பீட்டு தொகையைவிட 4.86% அதிகமாக வருகின்றது. தற்சமயம் மேற்கண்ட பள்ளி கட்டிடம் மோசமாக உள்ளதால் புதிய கட்டிடம் உடன் கட்ட வேண்டியது அவசியமாகின்றது. எனவே அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு தொகையைவிட 4,86% சதவீதம் அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு S. ரம்போலா ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண்.107/08–09

**<u>தீர்மானம் எண்: 192</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு நகர்நல அலுவலர் அறைக்கு தேவையான பிளாஸ்டிக் சேர்கள் 6 எண்ணிக்கை வாஙகவும், அதற்கான விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை எடுக்கவும் 6 எண்ணிக்கை பிளாஸ்டிக் சேர்கள் வாஙக உத்தேச செலவுத் தொகை ரூ 4750/– (ரூபாய் நாலாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) க்கு மாமன்றம் தனது தீர்மானம் எண். 119 நாள் 11/09/2008ல் அனுமதி வழஙகியுள்ளது.

6 எண்ணிக்கை 'NILKAMAL' பிளாஸ்டிக் சேர் வாஙக கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. மெஸ்ஸர்ஸ் கே,.கே,எஸ், ஏஜென்ஸி, தூத்துக்குடி – ரூ. 500+ வரி ரூ.20 = ரூ. 520/–
2. மெஸ்ஸர்ஸ் ராயல் பர்னிச்சர், தூத்துக்குடி. – ரூ.490 + வரி ரூ.19 = ரூ. 509/–
3. மெஸ்ஸர்ஸ் டி.எச்.ஏ.எஸ்,. இன்டஸ்டிரி,தூத்துக்குடி – ரூ. 495 + வரி ரூ.19.50= ரூ. 514–50

மேற்கண்டுள்ள விலைப்புள்ளியில் வரிசை எண் 2ல் உள்ள மெஸ்ஸர்ஸ் ராயல் பர்னிச்சர், தூத்துக்குடி என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளியான ரூ 490 + வரி ரு 19 = மொத்தம் ரூ 509–00 என்ற விலை குறைந்த விலையாகும். எனவே மெஸ்ஸர்ஸ் ராயல் பர்னிச்சர், தூத்துக்குடி நிறுவனத்தில் 6 எண்ணிக்கை 'NILKAMAL' பிளாஸ்டிக் சேர் வாஙக அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு –** அனுமதிக்கலாம்.

எச்.1/24747/2008

**<u>தீர்மானம் எண்: 193</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சி துப்புரவு பணியாளர் திரு. க. பழனி என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமண கடன் தொகை ரூ. 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.

இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமண கடன் ஏதும் பெறவி.லை அன்னார் 05–07–2006 முதல் துப்புரவு பணியாளராக 2 1/2 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். அ.ன்னார் மாத ஊதியமாக பிடித்தஙகள் போக ரூ 4657/– பெற்று வருகிறார். இவருக்கு திருமணக்கடன் வழஙகினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படி கடன் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் இத்துடன் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமண கடன் தொகை ரூ 10000/–ஐ நகராட்சி நிதியிலிருந்து வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். பி4/27104/08

**<u>தீர்மானம் எண்: 194</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

21. இம்மாநகராட்சியின் லெவிஞ்சிபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் இ,டைநிலை ஆசிரியையாக பணியாற்றி 30–6–2007ல் ஓய்வு பெற்ற திருமதி. சா. அனந்தம்மாள் என்பவர் தமது பணிக்காலத்தில் தமது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேம நல நிதி சந்தா தொகை ரூ. 2580/– மற்றும் அதற்கான வட்டி தொகை ரூ 1548/– ஆக மொத்தம் ரூ 4128/–ஐ வழங்க கோரி மனுச் செய்துள்ளார். இதன்படி இத்தொகையை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – திருமதி சா. அனந்தம்மாள் ஓய்வு பெற்ற ஆசிரியைக்கு ரூ 4128/–ஐ கல்வி நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிதிகலாம்.

சி1/26534/08

**தீர்மானம் எண்: 195**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

22. இம்மாநகராட்சியின் சண்முகபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியையாக பணியாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி.மு. சுப்புலெஷ்மி என்பவர் தமது பணிக்காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ 2640/– மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ 1572/– ஆக மொத்தம் ரூ 4212/– வழங்க கோரி மனுச் செய்துள்ளார். அதன்படி இத்தொகையை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – திருமதி மு. சுப்புலெஷ்மி ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியைக்கு ரூ 4212/–ஐ ஓய்வூதியத்திலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

சி1/26533/08

**தீர்மானம் எண்: 196**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

23. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் 22–2–08ம் தேதிய ந.க.எண். டி.4 .68430/2005 கடிதத்தில் சிதம்பர நகர் மெயின் ரோட்டிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து திரு. முத்துராஜா என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு எண். 7036/ 2008ல் வழக்கு தெடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சியரை முதல் பிரதிவாதியாகவும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரை 2வது பிரதிவாதியாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கானது 4–8–2008 தேதி விசாரணைக்கு வரப்பெற்று நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கும் அதற்காகும் செலவுத் தொகையை வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்

ஜி1. 4037/05

**தீர்மானம் எண்: 197**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

24. தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 2 பிளாக் 21 நகரளவு எண் 2608ல் அமைந்துள்ள அந்தோணியார் கோவில் தெருவிலுள்ள (மாடசாமிபுரம்) ஆக்கிரமிப்புனை அப்புறப்படுத்துவதற்கு 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 182ன்படி ஆக்கிரமிப்பாளர் திரு. நெப்போலியன் என்பவர்க்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதில் அன்னார் ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கூடாது என தூத்துக்குடி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் ஓ.எஸ். எண். 523/08ல் I.A.NO.. 1483/08 என்று எண்ணிடப்பட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1. திரு. T நெப்போலியன் 2. திருமதி. என்.

சரஸ்வதி ஆகிய இருவரும் வாதிகளாகவும் ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி அவர்களை பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகர்மன்ற வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்

எப்1.4972/08

**<u>தீர்மானம் எண்: 198</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

25. தூத்துக்குடி மாநகராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் மார்க்கட் அமைப்பதற்கு அரசு நிலத்தை 1951 ஆண்டில் நில உரிமை மாற்றம் செய்ததில் அன்றைய மதிப்பீட்டின்படி ரூ 32564/– செலுத்தும்படி தணிக்கை தடை பத்தி எண். 3/2ஏ– ல் குறிப்பிட்டுள்ளதாக தூத்துக்குடி வட்டாட்சியரின் 22–3–05ம் தேதிய நேர்முகக் கடிதம் அ2/1731/05 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக சில விபரங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்படவேண்டி உள்ளது. மேலும் தொகை செலுத்துவது தொடர்பாக மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்தியை நிவர்த்தி செயும் பொருட்டு தணிக்கை பத்தியில் வரிசை எண் 1ல் குறிப்பிட்ட தொகை ரூ 5927/–ஐ முதலில் செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1.4876/05

**<u>தீர்மானம் எண்: 199</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

26. தமிழ்நாடு அரசின் உள்ளாட்சி பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரசு பங்கு தொகையில் ரூ 5000/– லிருந்து ரூ 10000/– ஆக உயர்த்திய அரசாணை (பத்தாண்டு) எண் 340 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள் 8–8–2008ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 15–09–2000 முதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

சி1/26008/08

**<u>தீர்மானம் எண்: 200</u>**

பதிவு செய்யப்பட்டது

27. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வாகன துலக்குநராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–09–2008ம் தேதி பிற்பகல் முதல் பணி ஓய்வு பெற்ற திரு. க. நடராஜன் என்பவர், அன்னார் பணியாற்றி காலத்தில் ஊதியத்தில் பிடிதரம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/ – வட்டித் தொகை ரூ 9378/– மற்றும் அரசு மான்யத் தொகை ரூ 10000/–ஆக மொத்தம் ரூ 22,338/– (ரூபாய் இருபத்திரெண்டாயிரத்து முந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்) வழங்கவும் , தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** –அனுமதிக்கலாம்.

எச்1/27066/2008

**<u>தீர்மானம் எண்: 201</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

28. இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வாகன துலக்குநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–09–2008ம் தேதி ஓய்வு பெற்ற திரு. க. நடராஜன் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி நிலுவைத்தொகை ரூ 2646/–ஐ பொது சேமநலநிதிக் கணக்கில் சேர்க்க வேண்டிய தொகையினை அன்னார் ஓய்வு பெற்றதால் பொது நிதியிலிருந்து நேரில் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு –** அனுமதிக்கலாம்.

எச்1/27067/08

**<u>தீர்மானம் எண்: 202</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

29. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு ‘சி’ பிளாக் 33 நகரளவு எண் 73 நிலத்தில் பாளையங்கோட்டை ரோடு ஆசிரியர் காலனி சந்திப்பிற்கு கீழ்புறம் பாண்டியன் கிராம வங்கி முன்புறம் அமைய பெற்ற வேப்பமரம் மற்றும் வார்டு 4, சத்திரம்தெரு பிளாக் T. S. No. 1878 அமையப்பெற்ற வேப்பமரம் ஆகிய இரண்டு வேப்ப மரங்கள் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் மேற்படி மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர் தனது கடித எண் அ2. 6965/08 நாள் 6–10–2008இல் ஒப்புதல் அளித்துள்ளதை தொடர்ந்து மேற்படி இரண்டு வேப்ப மரங்களையும் பொது ஏலம் மூலம் வெட்டி அப்புறப்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 28635/08

**<u>தீர்மானம் எண்: 203</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

30. தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு வணிக வளாகத்தில் புதிய மாநகராட்சி அலுவலகம் கட்டப்பட உள்ளதால் அதிலுள்ள கடை எண் 19, 23,24,25,26,27, 28, 29, 30 மற்றும் 32 ஆகிய பத்து கடைகளின் உரிமம் ரத்துச் செய்ய மாமன்ற தீர்மான எண் 154 நாள் 22–10–2008இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி வணிக வளாகத்திலுள்ள கீழ்க்கண்ட கடை உரிமம் பெற்ற நபர்கள் ஜெயராஜ் ரோடு வணிக வளாகத்தில் உள்ள கடை எண் 22, 27, 28,29 ஆகிய கடைகளை ஒதுக்கீடு செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

| <u>வஎண்</u> | <u>கடை எண்</u> | <u>பெயர்</u> |
|---|---|---|
| 1 | 19 | வெற்றிவேல் |
| 2 | 24 | செந்தில்வேல் |
| 3 | 30 | பால்ராஜ் |
| 4 | 32 | ஜி. பாலமுருகன் |

மேற்படி விண்ணபத்தின் பேரில் ஜெயராஜ் ரோடு வணிக வளாகத்தில் சுமார் 4 வருடங்களாக காலியாக உள்ள கடை எண் 21, 27, 28, 29 ஆகிய நான்கு கடைகளை மேற்படி 4 கடைகள் உரிமம் பெற்ற நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யவும் அதற்கு வாடகை நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ஜெயராஜ் ரோடு வணிக வளாகத்தின் அருகிலுள்ள கடைகளுக்கு செலுத்தப்படும் சராசரி மார்கெட் மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 9676/2007

**<u>தீர்மானம் எண்: 204</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

31. இம்மாநகராட்சிப் பகுதி ஜின் பாக்டரி ரோடு மாநகராட்சிப்பள்ளியில் புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு கல்வி நிதியின் கீழ் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 415 நாள் 18–7–2008ல் ரூ 15,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ரம்போலா , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ. 10. 22% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ. 4. 94% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன், அவரின் திப்பீட்டை விட 4. 94% அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2008–09க்கு பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல் படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும் தற்போது கட்டுமான பொருட்கள் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியாளர் கையேடு பக்கம் எண் 9 பத்தி எண் 2.7. 2இல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் 5 சதவிகிதத்திற்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட **4.94** சதவிகிதம் மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 102/2008–09

**<u>தீர்மானம் எண்: 205</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

**மாமன்றம், தூத்துக்குடி**
**நாள் 20–11–2008**

**மேயர்,**
**மாமன்றம், தூத்துக்குடி**